


19. 05. 2026

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோடி நார்வே தலைநகர் ஓஸ்லோவில் இந்திய – நார்டிக் உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.
- செங்கல்பட்டு - அரக்கோணம் இரட்டை ரயில் பாதை திட்டத்தால் கூட்ட நெரிசல் குறையும் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- மாற்று திறனாளி குழுக்களின் பிரதிநிதிகள் முதலமைச்சர் திரு.விஜய்-யை சென்னையில் இன்று சந்தித்து பேசியுள்ளனர்..
- அரசு பள்ளிகளில் மாணாக்கரின் எண்ணிக்கையை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ் மோகன் கூறியுள்ளார்.
- மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் கோலாலம்பூரில் இன்று தொடங்கின.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி நார்வே தலைநகர் ஓஸ்லோவில் இந்திய – நார்டிக் உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

தொழில்நுட்பம், புதுப்பிக்கதக்க எரிசக்தி பாதுகாப்பு, ஸ்திரதன்மை வர்த்தகம் உள்ளிட்ட பிரிவுகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்த மாநாடு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக டென்மார்க், ஐஸ்லாண்ட், ஃபின்லாண்ட் நாடுகளின் பிரதமருடனும், பிரதமர் திரு.நரேந்திரமோடி இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

முன்னதாக நடைபெற்ற வர்த்தக மற்றும் ஆராய்ச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் எட்டப்பட்ட பின்னர் இருதரப்பு வர்த்தகமும் முதலீடுகளும் அதிகரித்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

பிரதமர் தமது நார்வே பயணத்தை முடித்துக்கொண்டு தமது பயணத்தின் ஐந்தாவது மற்றும் இறுதி கட்டமாக இன்று இத்தாலி செல்கிறார்.

***********

ராஜ்நாத்சிங்

இந்தியா - வியட்நாம் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் உறுதிபட தெரிவித்துள்ளார்.

வியட்நாம் தலைநகர் ஹனாயில் அந்நாட்டு அதிபர் To Lam-ஐ இன்று சந்தித்து பேசிய பின்னர் அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் இருநாடுகளுக்கிடையே மேம்படுத்தப்பட்ட விரிவான ஒத்துழைப்பு எட்டப்பட்டதை தொடர்ந்து நட்புறவும் வலுப்பெற்றுள்ளதாக கூறினார்.

இந்தியாவும் வியட்நாமும் ராணுவம், பாதுகாப்பு, பிராந்திய ஸ்திரதன்மையில் பரஸ்பர நம்பிக்கையுடனும் ஒத்துழைப்புடனும் திகழ்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வியட்நாம் பாதுகாப்பு அமைச்சர் ஜென்ரல் Phan Van Giyang உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் அவர் மேற்கொண்டார்.

***********

அஷ்விணி வைஷ்ணவ்

சென்னை புறநகர் ரயில் கட்டமைப்பிற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அரக்கோணம் - செங்கல்பட்டு இரட்டை ரயில்பாதை பணிகளுக்கு 993 கோடி ரூபாய் அளவிற்கு ரயில்வே நிதி அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை கடற்கரை – தாம்பரம் – செங்கல்பட்டு - அரக்கோணம் ரயில்வழி பாதையில் 68 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்த இரட்டை ரயில் பாதை அமைக்கப்பட உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

தற்போது புறநகர் பகுதியில் உள்ள கூட்ட நெரிசலை கையாளும் வகையிலும், செயல்பாடு மற்றும் நேரம் தவறாமையை முன்னெடுத்து செல்லும் வகையிலும் இந்த திட்டம் அமையும் என்று கூறினார்.

பயணியர் மற்றும் சரக்கு ரயில் போக்குவரத்திற்கு இது வகை செய்வதோடு, சிமெண்ட் மோட்டார் வாகனங்கள், உணவு தானியங்கள், இரும்பு எஃகு போன்றவற்றின் போக்குவரத்திற்கும் இது வழிகோலும்

***********

பெட்ரோல் டீசல்

நாடுமுழுவதும் பெட்ரோல் டீசல் விலை மீண்டும் இன்று உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி பெட்ரோல் லிட்டருக்கு 82 காசுகள் உயர்ந்து 104 ரூபாய் 49 காசுகளாகவும்,

டீசல் 86 காசுகள் அதிகரித்து 96 ரூபாய் 11 காசுகளாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்வை அடுத்து இந்த விலை ஏற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக பெட்ரோல் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

***********

உபேந்திரா திவேதி

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் நமது ராணுவ திறனையும், தகவல் கட்டுப்பாட்டையும், தூதரக சமிங்கைகளையும் பொருளாதார முடிவுகளையும் ஒருங்கே முன்னெடுத்து சென்றதாக ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வளத்திற்கான பாதுகாப்பு நீடித்த நிலையான தேச வளர்ச்சி கருத்தரங்கில் உரையாற்றிய அவர், இந்த துல்லிய தாக்குதல் தீவிரவாத கட்டமைப்பை தகர்த்ததாக எடுத்துரைத்தார்.

***********

நீதிமன்றம்

தடுப்பூசி மற்றும் கருத்தடை நடவடிக்கைகளுக்கு பின்னர் தெருநாய்களை வீதிகளில் விடக்கூடாது என்ற முந்தைய உத்தரவை திரும்ப பெற உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக 2025-ம் ஆண்டு நவம்பர் மாத ஆணையை மாற்றி அமைக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீது இன்று விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம் அத்தகைய நாய்களை அதற்கான முகாம்களில் பராமரிக்க அறிவுறுத்தியுள்ளது.

குழந்தைகள், மூத்த குடிமக்கள், பாதசாரிகள் மீதான நாய்களின் தாக்குதல் கவலை அளிப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவை செயல்படுத்தாத அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையங்களை ஏற்படுத்துவதோடு, ரேபிஸ் நாய்கடி தடுப்பு மருந்துகள் இருப்பை மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் உறுதி செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

ரேபிஸ் தொற்று உள்ள ஆபத்தான நாய்களை கருணை கொலை செய்வது உள்ளிட்ட சட்டத்திற்குட்பட்ட நடவடிக்கைகள் உயர்நீதிமன்ற கண்காணிப்புடன் மேற்கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது,

***********

முதலமைச்சர்

சென்னை தலைமை செயலகத்தில் மாற்று திறனாளிகளுக்கான தமிழக அரசின் பல்வேறு குழுக்களின் தலைவர்களும், உறுப்பினர்களும் முதலமைச்சர் திரு.விஜய்-யை இன்று சந்தித்து பேசியுள்ளனர்..

இதன்படி மாற்றுத்திறனாளிகளுக்கான தமிழ்நாடு ஆலோசனை குழு,

தண்டுவட பாதிப்படைந்தோர் சங்கம்

தமிழ்நாடு மாற்றுத்திறனாளி சங்க கூட்டமைப்பு

மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக நீதி இயக்கம்

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் கூட்டமைப்பு,

சென்னை அணுகல் தன்மை ஆய்வு மையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் முதலமைச்சரை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

அதேபோல் மாற்று பாலினத்தோர் உரிமைகள் ஆர்வலர், சமூகநல அறக்கட்டளை இயக்குனர், சமூக பணியாளர்களும் முதலமைச்சரை இன்று சென்னை தலைமை செயலகத்தில் சந்தித்துள்ளனர்.

***********

ராஜ் மோகன்

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் மாணாக்கரின் வருகையும், எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ் மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில், ஒன்றுமுதல் – மூன்றாம் வகுப்பு வரையிலான புதிய பாட நூல்களுக்கான பயிற்சி கையேட்டை இன்று வெளியிட்டு பேசிய அமைச்சர், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் சென்னை நூற்றாண்டு நூலகத்தில் நாளை வெளியிடப்படும் என்றார்.

வாய்ஸ்

***********

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் தனியார் பள்ளி வாகனங்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்களில் மாணாக்கரை ஏற்றிச்செல்லும்போது விதிகள் மீறப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி எச்சரித்துள்ளார்.

வாய்ஸ்

***********

சாயபட்டரை

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பகுதியில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையில், சாயக்கழிவுகளை சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றிய, 5 ஆலைகளை மூடி சீல் வைத்தனர்.

மேலும் 11 சாயப்பட்டரைகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

***********

இருவரி

மதுரை மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், கணக்கெடுப்பு பணிகள் துல்லியமாகவும், கால கெடுவிற்குள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதோடு, கணக்கெடுப்பு பணிகளில்

ஈடுபடும் அனைத்து துறை அலுவலர்களும் அரசின் வழிகாட்டுதல்படி, ஒருங்கிணைந்து செயல்பட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், கைவினைஞர் பயிற்சி திட்டத்தின் கீழ், வரும் கல்வியாண்டிற்கான சேர்க்கை விண்ணப்பங்களை 8 மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர், இணையதளம் வாயிலாக சமர்ப்பித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா அறிவுறுத்தியுள்ளார்.

***********

பேட்மிண்டன்

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் கோலாலம்பூரில் இன்று தொடங்கின.

ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் அம்சா கருணன், அர்ஜூன் இணை – ஃபிரான்ஸ் இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் Ahwini Bhat, Shikha Gautam இணை - கனடா இணையுடன் மோதுகிறது.

***********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஜெய்பூரில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் – லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது